6.7.2019.
அசல் வழக்கு எண 245-2014
வா.சா.1 பாலசுப்பிரமணி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜாராகி
பிரதிவாதி தர்ப்பில் குறுக்கு் விசாரணை தொடர்ச்சி

இநத வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும என்றால் வாரிசு கேட்டு தாக்கல் செயதுள்ளேன். இந்த வழக்கை தாக்கல செய்வதற்கு யார் விபரம் சொன்னார்கள் என்றால் நான் சொல்லவில்லை என் தம்பி சொன்னார். வழக்கு பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியும். வழக்கு தர்ககல் செய்ய விபரம் சொல்வதற்கு நான் செல்லவில்லை என் தம்பி ராதாடகிருஷ்ணன் தான் விபரம் சொன்னார். என்னுடன் சேத்து 8 பேர்கள் இநத வழக்கை தாக்கல் செய்துள்ளோம் வழக்கில் உள்ள வாதிகள் 8 பேர்களுக்கும் சேர்த்து ராதாகிருஷ்ணன் தர்ன விபரம் சேர்னனார் என்றால் சரிதான பிராதில் அனைவரும் கையெழுத்து செய்துள்ளோம் நான்5ம் வகுப்புவரை படித்துள்ளேன் எழுதபடிக்க தெரியாது. பிராதில் என்ன மொழியில் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது பிராதில் கையெழுத் செய்யும்போது பிராதில் உள்ள விபரங்களை என் வழக்கறிஞர் படித்து காண்பித்தார் அதில் உள்ள விபரம் தற்போது எனக்கு நினைவில்லை. நிருபணவாக்குமூலம் தர்ககல் செய்யப்பட்டுள்ளது பற்றி எனக்குத் தெரியாது. நிருபணவாக்குமூலம் என் வழக்கறிஞர் டைச் செய்து கொடுக்கவில்லை.

(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)